Sub Court, Eraniel O.S.No.25/**2020**

**07.11.2022**

வா.சா.2 திரு. கனி சேவியர் ராஜ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை (1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)

நான் இந்த வழக்கில் 2வது வாதி. 1ம் வாதி இந்த வழக்கில் சொன்ன சாட்சியம் மற்றும் ஆவணம் பற்றி எனக்குத் தெரியும். வழக்குச் சொத்தின் பழைய சர்வே எண்.4431 என்றால் சரிதான். ஆரம்பத்தில் வழக்குச் சொத்து சபரிமுத்து, த/பெ. குட்டி நாடார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. என்னுடைய தகப்பனாரின் தகப்பனார் பெயர் செபஸ்டியான். என் தாத்தா செபஸ்டியானும் மற்றும் மூவரும் சேர்ந்து வாய்கரால் பாகம் செய்து கொண்டதாக நான் சொல்லியுள்ளதில் அந்த மற்ற மூவர் யார் என்று எனக்குத் தெரியாது. அந்த வாய்கரால் பாகம் எங்கு, எந்த தேதி, மாதம், வருடம் நடந்தது என்று எனக்குத் தெரியாது. செபஸ்டியான் காலத்திற்கு பிறகு 1ம் வாதியும் என் தகப்பனாரும் வழக்குச் சொத்தை பாகம் செய்து எடுத்த போது அது தனிக் கண்டமாக இருந்தது. 1ம் வாதியும் என் தகப்பனாரும் வழக்குச் சொத்தை தனிக் கண்டமாக உட்பிரிவு செய்து தர வருவாய் துறையில் மனு செய்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு மனு செய்ததாகவும் அந்த மனுவின் பேரில் வருவாய் துறையினர் வந்து பார்த்த போது தனிக் கண்டமாக வழக்குச் சொத்து இல்லாததால் அந்த மனு நிராகரிக்கப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தின் புதிய சர்வே எண்.109/15. வழக்குத் தாக்கல் செய்யும் சமயத்தில் சர்வே எண்.109/15 என்ற சர்வே எண்ணே கிடையாது என்றாலும் அது 109/15ஏ, பி, சி, டி என்று பிரிக்கப்பட்டிருந்தது என்றாலும் சரியல்ல. என்னுடைய தாத்தா செபஸ்டியான் என்பவரின் கல்லறை இருப்பதாகச் சொல்லும் கண்டம் இருக்கும் இடத்தின் வடக்கே வீரவிளை சாலை செல்கிறது என்றால் சரிதான். அதற்கு நேர் வடக்கே 1ம்

பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். அதனுடைய புதிய சர்வே எண்.109/8 என்றால் அது எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தின் கிழக்குப் பக்கம் அருள்தாஸ் மற்றும் மணிகண்டன் என்பவர்களின் வீடுகள் உள்ளது என்று சொன்னால் இரண்டு வீடுகள் உள்ளது. ஆனால் அந்த நபர்களின் பெயர்கள் எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தின் தெற்குப் பக்கம் முத்து நாடார் என்பவரின் வீடு உள்ளது என்றால் வீடு உள்ளது. ஆனால் அந்த நபரின் பெயர் எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தின் மேற்குப் பக்கம் 6ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குப் பக்கம் 3ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குப் பக்கம் உள்ள சொத்து யாருடையது என்று எனக்குத் தெரியாது. அதற்கும் மேற்குப் பக்கம் டேவிட்சன் மற்றும் புஷ்பராஜ் ஆகியோரின் வீடுகள் உள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. 1ம் வாதி 05.03.2020ம் தேதி கொடுத்த புகார் சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. அந்த புகாரை கொடுத்த நபரே திரும்பப் பெற்றுக் கொண்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 9.250 செண்ட் மட்டுமே பாத்தியம் என்பதற்கு என்னால் ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என் அப்பா சொல்லித் தான் அந்த விபரம் எனக்குத் தெரியும். என் அப்பா தற்போது உயிருடன் இல்லை. அரசாங்கத்தையும் மேற்படி டேவிட்சன் மற்றும் புஷ்பராஜ் ஆகியோர்களையும் சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வருவாய்துறை எங்களுடைய உட்பிரிவு மனுவை தள்ளுபடி செய்ததை எதிர்த்து துறை சார்ந்த மேல்முறையீடு செய்யாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2014ம் வருடம் செட்டில்மென்ட் ஆவணத்தை என் தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்ததிலிருந்து என் வழக்குப்படியே 1ம் வாதிக்கு வழக்குச் சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் நானும் 1ம் வாதியும் பொதுவாக அனுபவித்து வருகிறோம். நான் 1ம் வாதிக்கு சொத்தை எழுதிக் கொடுக்கவில்லை.

1043 மலையாள வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட பாகப் பத்திரத்தின் படி அதன் வாரிசுகளான 1 முதல் 5 பிரதிவாதிகள் பட்டிகைச் சொத்தில் உரிமைக் கோருவதையும் 2015 ல் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகப் பத்திரத்தையும் அதன் தொடர்ச்சியாக 2020 ம் வருடம் 6 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தையும் நாங்கள் ரத்து செய்யவோ அதில் உரிமை கோரவோ முடியாது என்றால் சரியல்ல. ஏற்கனவே இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் இவ்வழக்கில் தள்ளுபடி செய்யப்பட்ட சூழ்நிலையிலும் அதன் பேரில் மேல்முறையீடு செய்யப்படாத நிலையிலும் இவ்வழக்கில் உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என்
முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.